# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

**ஆணை நாள். 14.05.2026**

**முன்னிலை**

**திரு. அபய் குமார் சிங், இ.கா.ப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 5122/F/2025**

திரு.M.சனாவுல்லா -- மனுதாரர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் /
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), -- பொது அதிகார அமைப்பு
மாவட்ட ஆட்சியரகம்,
கிருஷ்ணகிரி - 635 115.

**ஆணை**

இவ்வாணையத்தில் இன்று 14.05.2026 முற்பகல் நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு.M.சனாவுல்லா அவர்கள் நேரில் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல் முறையீட்டு நடைமுறை) விதிகள் 2012, விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத்தகவல் அலுவலர், திரு.சி.கிருஷ்ணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) (பொறுப்பு), மாவட்ட ஆட்சியரகம், கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 10.01.2025 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில், ***"கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் வட்டம், பர்கூர் வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில், வருவாய் வட்டாட்சியராகப் பணிபுரிந்து வரும் K.பொன்னாலா அவர்கள், எந்த கல்வித் தகுதியின் அடிப்படையில் எந்த முறையில் எந்த ஆண்டு எந்த தேதியில், எந்த துறையில் முதன் முதலில் அரசுப் பணியில் சேர்ந்தார் என்ற விவரத்தின் நகல்"*** என்பன போன்ற 12 இனங்களில் பொதுத் தகவல் அலுவலர் மற்றும் மாவட்ட

ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), கிருஷ்ணகிரி கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்களுக்கு அவர்களுக்கு மனு தாக்கல் செய்துள்ளார்.

3. மனுதாரர் பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து தகவல்கள் பெறப்படாததால் தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005 பிரிவு 19(1)-ன் கீழ் 22.02.2025 தேதியிட்ட தனது முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். முதல் மேல்முறையீட்டு அலுவலர் அவர்களிடமிருந்து தகவல்கள் கிடைக்க பெறவில்லை என்று மனுதாரர் 27.03.2025 நாளிட்ட தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005 பிரிவு 19(3)-ன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 14.05.2026 முற்பகல் இவ்வாணையத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரரின் 10.01.2025 தேதியிட்ட மனுவிற்கு மூ.மு.1536/2025/அ1, 06.12.2025 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக இனம் வாரியான தகவல்களை வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்து அதன் நகல்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

5. மேலும், இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரரின் வாதுரைகளை அறிய இயலாத நிலையில், மனுதாரரின் தகவல் கோரும் மனுவையும், பொதுத்தகவல் அலுவலரின் **பதிலையும் ஆணையம் கவனமுடன் பரிசீலனை செய்கையில், மனுதாரர் கோரிய தகவல்களுக்கு பொதுத்தகவல் அலுவலரால்** வழங்கப்பட்டுள்ள **தகவல்கள் போதுமானது என ஆணையம் கருதுகிறது.** மேலும், உரிய காலத்தில் தகவல் வழங்காத அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் மற்றும் மேல் முறையீட்டு அலுவலர் அவர்களுக்கு இவ்வாணையம் கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கிறது:-

- ***மனுதாரரின் 10.01.2025 நாளிட்ட தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)ன் கீழான மனுவில் கோரியுள்ள இனங்களுக்கு உரிய காலத்தில் (30 தினங்களுக்குள்) தகவல் வழங்காத அப்போதைய பொதுத்தகவல் அலுவலர், திரு.கோ.குமரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) பொறுப்பு, கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்களுக்கு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 20(1) மற்றும் 20(2)-ன்கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான அவரது எழுத்து மூல விளக்கத்தினை பெற்று 19.06.2026 அன்று தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் அவர்கள் ஆணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்படுகிறது.***

- ***மனுதாரரின் 22.02.2025 நாளிட்ட தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 19(1)ன் (முதல் மேல்முறையீட்டு மனுவிற்கு)***

***<u>தகவல் வழங்காத அப்போதைய மேல்முறையீட்டு அலுவலர், மாவட்ட வருவாய் அலுவலர், மாவட்ட ஆட்சியரகம், கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்கள் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான அவரது எழுத்து மூல விளக்கத்தினை பெற்று 19.06.2026 அன்று தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் அவர்கள் ஆணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்படுகிறது.</u>***

**ஒம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

**<u>வழக்கு எண்.</u>** <u>SA 5122/F/2025</u>

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

1. **பொதுத் தகவல் அலுவலர் /**
   மாவட்ட ஆட்சியரின் நேர்முக
   உதவியாளர் (பொ),
   மாவட்ட ஆட்சியரகம், கிருஷ்ணகிரி - 635 115.

2. **அப்போதைய மேல்முறையீட்டு அலுவலர்,**
   மாவட்ட வருவாய் அலுவலர்,
   மாவட்ட ஆட்சியரகம், கிருஷ்ணகிரி மாவட்டம்.
   **(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வழியாக)**

3. **திரு.கோ.குமரன்,**
   **அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் /**
   மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொ),
   மாவட்ட ஆட்சியரகம், **கிருஷ்ணகிரி மாவட்டம்**
   **(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வழியாக)**

**<u>மனுதாரர்</u>**

திரு.சனாவுல்லா,
224D, சேலம் மெயின் ரோடு,
கிருஷ்ணகிரி,
கிருஷ்ணகிரி - 635 001.

**<u>நகல்</u>**

பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
சென்னை - 35 (For follow up)

Copy to file: RV/PA
15.05.2026